### 1978, 1984 மற்றும் 1990ஆம் ஆண்டுகளில் நாடாளுமன்ற மேலவைக்கு என்னை அனுப்பி வைத்த

## முத்தமிழ் அறிஞர் கலைஞருக்கு என் நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்!

# 2019ல் மேலவைக்கு என்னை அனுப்பி வைத்த - 'திராவிட மாடல்' அரசின் முதல்வருக்கு எனது நன்றிகள்!

### நாடாளுமன்ற மாநிலங்களவையில் – வைகோ பிரியாவிடை உரை!

**புதுடெல்லி, ஜூலை. 26-**

**நாடாளுமன்ற மாநிலங்களவையில் தமது உறுப்பினர் பதவிக்காலம் நேற்று முன்தினத்துடன் (ஜூலை 24) நிறைவுற்றதையொட்டி, அன்றைய தினம் மாநிலங்களவையில் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அவர்கள் உருக்கமிகு 'பிரியாவிடை உரை' ஆற்றினார்.**

**அவ்வுரையில் வைகோ அவர்கள், "1978, 1984 மற்றும் 1990 ஆம் ஆண்டுகளில் இந்தப் பெருமைமிகு அவைக்கு என்னைத் தேர்ந்தெடுத்து அனுப்பிய மறைந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுக்கு என் நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகின்றேன்.**

**2019 ஆம் ஆண்டில் இந்த மேலவைக்கு என்னைத் தேர்ந்தெடுத்து அனுப்பியதற்காக, திராவிட மாடல் அரசாங்கத்தை நடத்தி வரும் தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்." என்று உணர்ச்சி மேலிடக் குறிப்பிட்டார்.**

நாடாளுமன்ற மாநிலங்களவையில் நேற்று முன்தினம் (24.07.2025) நடைபெற்ற பிரியாவிடையின்போது, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் வைகோ அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

"மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, எனக்கு இந்த வாய்ப்பை வழங்கியதற்கு மிக்க நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் பெருமை மிக்க அவையின் பணிக்காலம் நிறைவடைந்த நிலையில் உங்களிடமிருந்து விடைபெற எனக்கு வாய்ப்பளித்த இங்குள்ள அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் என் நன்றியை உரித்தாக்குகின்றேன்.

என் மீது எப்போதும் பாசத்தையும், மரியாதையையும் காட்டிய முன்னாள் அவைத் தலைவரும், துணை குடியரசுத் தலைவருமான மாண்புமிகு ஜகதீப் தன்கருக்கு எனது நெஞ்சார்ந்த நன்றி. அவர் நீண்ட காலம் உடல் நலத்துடன் வாழ வாழ்த்துகிறேன்.

"1978, 1984 மற்றும் 1990 ஆம் ஆண்டுகளில் இந்தப் பெருமைமிகு அவைக்கு என்னைத் தேர்ந்தெடுத்து அனுப்பிய மறைந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுக்கு என் நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகின்றேன்.

2019 ஆம் ஆண்டில் இந்த மேலவைக்கு என்னைத் தேர்ந்தெடுத்து அனுப்பியதற்காக, திராவிட மாடல் அரசாங்கத்தை நடத்தி வரும் தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தி.மு.க.வில் முன்பு நாடாளுமன்றக் கட்சித் தலைவராக இருந்த மாண்புமிகு முரசொலி மாறன் அவர்களால் வார்ப்பிக்கப் பட்டவன் நான்.

அவை துணைத் தலைவர் அவர்களே, நான் மேற்கொண்ட முயற்சியால், நாடாளுமன்றத்தின் மைய மண்டபத்தில் அப்போதைய பிரதமர் விஸ்வநாத் பிரதாப் சிங் அவர்களால் பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கரின் உருவப்படம் திறந்து வைக்கப்பட்டது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.



ஈழத் தமிழர்களின் துயரம் மற்றும் சிங்கள அரசாங்கத்தால் கொடூரமாக இனப்படுகொலை செய்யப்பட்ட ஈழத் தமிழர்கள் குறித்து 13 முறை கவன ஈர்ப்புத் தீர்மானத்தை இந்த அவையில் கொண்டுவந்து உரையாற்றியிருக்கிறேன். இதன் தொடர்ச்சியாக 19 மாதங்கள் 'பொடா' சட்டத்தின் கீழ் இந்தியாவிலேயே தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட ஒரே நாடாளுமன்ற உறுப்பினர் நான்தான். 'மிசா' சட்டத்தின் கீழ் 12 மாதங்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டேன். மொத்தத்தில், நான் 5 ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளேன்.

#### சிறையில் விரிந்த மடல்கள்!

பொடா சட்டத்தின் கீழ், எனது உணர்வுகளையும். நிகழ்வுகளையும் 'சிறையில் விரிந்த மடல்கள் (From the portals of Prison)' என்ற தலைப்பில் ஒரு புத்தகமாக எழுதினேன். இந்நூல் அப்போதைய பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களால் செப்டம்பர் 3, 2004 அன்று சென்னையில் வெளியிடப்பட்டது.

அவை துணைத் தலைவர் அவர்களே, பிரிவு என்றுமே மன வலியை ஏற்படுத்தக் கூடியது, மறக்கமுடியாதது. இந்தப் புகழ்மிக்க சபையில், எதிர்க்கட்சித் தலைவர், மாண்புமிகு மல்லிகார்ஜுன கார்கே, மாண்புமிகு சோனியா காந்தி, மாண்புமிகு நிர்மலா சீதாராமன், மாண்புமிகு அஷ்வினி வைஷ்ணவ், மாண்புமிகு ஹர்தீப் சிங் பூரி, மாண்புமிகு டெரெக் ஓ'பிரையன், மாண்புமிகு ஜெய்ராம் ரமேஷ், மாண்புமிகு பி. சிதம்பரம், மாண்புமிகு ராம் கோபால் யாதவ், மாண்புமிகு திக்விஜய் சிங், மாண்புமிகு திருச்சி சிவா, மாண்புமிகு வில்சன், மாண்புமிகு என்.ஆர். இளங்கோ, மாண்புமிகு சகோதரி ஜெயா பச்சன், தோழர்கள் மாண்புமிகு ஜான் பிரிட்டாஸ், பேராசிரியர் மனோஜ் குமார் ஜா, மாண்புமிகு சஞ்சய் சிங், மாண்புமிகு டாக்டர் தம்பிதுரை, மாண்புமிகு சரத்பவார், மாண்புமிகு தேவேகவுடா, பிரியங்கா சதுர்வேதி, பைசல்கான் மற்றும் எனது அண்டை மாநிலமான கேரளா நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரின் மறக்கமுடியாத உரைகளைக் கேட்கும் பெரும்பேறு எனக்குக் கிடைத்தது.

அவை துணைத் தலைவர் அவர்களே, ஜான் பிரிட்டாஸ் மற்றும் பேராசிரியர் மனோஜ் குமார் ஜா என் மீது பொழிந்த அன்பையும் பாசத்தையும் என்னால் ஒருபோதும் மறக்க இயலாது.

எங்கள் மூவரையும் மூன்று துப்பாக்கி வீரர்கள் (மஸ்கடியர்ஸ்) என அழைத்தார்கள். இந்தச் சபையில் உள்ள அனைத்து உறுப்பினர்களின் அன்பையும் நட்பையும் இந்தப் பணிக் காலம் நிறைவடைந்த நிலையில் இழக்கிறேன் என்று நினைக்கின்ற போது மனம் வேதனைப்படுகிறது.

மாண்புமிகு அடல் பிஹாரி வாஜ்பாய் அவர்கள் பிரதமராக இருந்த போது, இந்திய பொதுத்துறை நிறுவனங்களில் நவரத்தின விருது பெற்ற இலாபம் ஈட்டக் கூடிய நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷனின் பங்குகளை விற்பனை செய்ய ஒன்றிய அரசு தீர்மானித்தது. நான் மாண்புமிகு பிரதமரை அவரது இல்லத்தில் சந்தித்து, 25 தொழிற்சங்கங்களின் வேண்டுகோள் மனுவை அளித்தேன். "என்.எல்.சி. எனது தமிழ்நாட்டில் உள்ளது என்று நான் அவரிடம் கூறினேன். 25,000 தொழிலாளர்கள் இந்தத் தொழிற் நிறுவனத்தில் வியர்வை சிந்தி உழைத்து வருகின்றார்கள். எனவே இதை தனியார்மயமாக்கக் கூடாது என்று வாதாடினேன். ஏற்கனவே காபினெட் அமைச்சரவை என்.எல்.சி., நிறுவனத்தை தனியார்மயமாக்க வேண்டும் என்று முடிவு செய்துள்ளது. இரண்டு அல்லது மூன்று நாள்களில் இது தனியார்மயமாக்கப்படும் என்று பிரதமர் வாஜ்பாய் அவர்கள் கூறினார்.

மத்தியப் பிரதேசத்தில் ஒரு நிகழ்வில், மக்களிடையே "வைகோ எனது வளர்ப்பு மகன்" என்று நீங்கள் கூறினீர்கள். நான் பிறந்த தமிழ்நாட்டிற்கு நான் ஏதாவது செய்ய வேண்டாமா? இந்த முடிவை தயவுசெய்து திரும்பப் பெறுமாறு நான் உங்களிடம் மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.

பிரதமர் வாஜ்பாய் அவர்கள் வழக்கம் போல், கண்களை மூடிக்கொண்டு ஆழ்ந்த சிந்தனைக்குப் பிறகு, "என்.எல்.சி. தனியார்மயமாக்கப்படக் கூடாது என்ற கருத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். என்.எல்.சி. தனியார்மயமாக்கப்படாது" என்று உறுதி கூறினார். பிரதமரின் இல்லத்திலிருந்து 'இந்து' ஆங்கில செய்தித்தாளுக்கு இந்தத் தகவலைத் தெரிவித்தேன்; அது மறுநாள் காலை 'இந்து' நாளேடு முதல் பக்கத்தில் வெளியிடப்பட்டது.

#### பேரறிஞர் அண்ணாவின் மொழிக் கொள்கை!

தமிழ்நாடு முதல்வராக பேரறிஞர் அண்ணா இருந்தபோது, சட்டமன்றத்தில், "மும்மொழிக் கொள்கையை நாங்கள் ஏற்க மாட்டோம், தமிழ் மற்றும் ஆங்கிலம் மட்டுமே எங்கள் இரு மொழிக் கொள்கையாக இருக்கும்" என்று அறிவித்தார்.

இன்று கர்நாடக, மகாராஷ்டிரா, மேற்கு வங்க அரசுகள் தமிழ்நாட்டின் மொழிக் கொள்கையைப் பின்பற்றுகின்றன என்பதை எண்ணி மகிழ்ச்சியடைகிறேன்.

சகோதரி மம்தா அம்மையார் அவர்களை என்னால் ஒருபோதும் மறக்க இயலாது. ஒரு நாள், பிற்பகல் நேரத்தில் பேசவிருந்த அவர், என்னை நோக்கி விரைந்து வந்து, என் கருப்பு சால்வையை கேட்டு வாங்கி, "இன்று நான் பல எம்.பி.க்களுடன் போராட வேண்டும், இந்த சால்வை எனக்கு மன உறுதியையும் துணிவையும் தரும்" என்று கூறினார்.

#### இந்தித் திணிப்பு - மொழியியல் பயங்கரவாதம்!

இரண்டு நாட்களுக்கு முன்பு, சகோதரி மம்தா பானர்ஜி அவர்கள் "இந்தித் திணிப்பு என்பது மொழியியல் பயங்கரவாதம்" என்று கூறியுள்ளார்.

எனக்கு ஒத்துழைப்பு அளித்த நாடாளுமன்றச் செயலாளர் மற்றும் அவரது அனைத்து குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

கவிஞர் லாங் ஃபெல்லோ அவர்களின் கவிதையை இந்த அவையின் இளம் உறுப்பினர்களிடம், மேற்கோள் காட்ட விரும்புகின்றேன். வரலாறு படைத்த மனிதர்கள் அடைந்த உயரங்கள் , திடீர் விமானப் பயணத்தால் ஏற்பட்டது அல்ல, அவர்களின் சக தோழர்கள் தூங்கும்போது, இவர்கள் இரவில் உழைத்துக் கொண்டிருந்தார்கள். எனவே, நீங்கள் கடுமையாக இரவு பகல் பாராது கண் துஞ்சாது உழைக்க வேண்டும். அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

#### பேரறிஞர் அண்ணாவின் கன்னிப் பேச்சு!

1963 ஏப்ரலில் இந்தப் பெருமைமிகு அவையில் மாபெரும் தமிழ்த் தலைவர் பேரறிஞர் அண்ணாவின் கன்னிப் பேச்சிலிருந்து சிலவற்றை மேற்கோள் காட்டுவது மிகவும் பொருத்தமானதாக இருக்கும்:

அவர் தனது கன்னிப் பேச்சில், "நான் திராவிட இனத்தைச் சேர்ந்தவன் என்பதை பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால் திராவிடர்கள் ஒட்டுமொத்த தேசத்திற்கும் வழங்க உறுதியான, தனித்துவமான, வித்தியாசமான ஒன்றைப் பெற்றுள்ளனர் என்று நான் கருதுகிறேன். எனவேதான் நாங்கள் சுயநிர்ணய உரிமையைப் பெற விரும்புகிறோம்". அவர் மேலும் கூறுகிறார்: "எதிர்காலங்களில், ஒரு புதிய பாராட்டு உணர்வு ஏற்படும், தெற்கின் தேவைகள் மற்றும் கோட்பாடுகள் நன்கு புரிந்து கொள்ளப்படும், மேலும் எனது பெருமைக்குரிய திராவிட நாட்டிற்கு சுயநிர்ணய உரிமை வழங்கப்படும்".

நமது மனித வாழ்க்கையில், நாம் தோல்வி, ஏமாற்றம் மற்றும் துரோகங்களை எதிர்கொள்ளலாம், ஆனால் அதற்காக நாம் கவலைப்படத் தேவையில்லை.

1576 இல் ஹால்திகாட்டி போரின் தோல்விக்குப் பிறகு, மகா ராணா பிரதாப் சிங் பற்றிய அந்தப் பழங்கால மேற்கோளை நான் மேற்கோள் காட்ட விரும்புகிறேன்.

"காய்ந்த ரொட்டிகள் கிடைக்கும் அந்த நேரம் வரை, ஓடைகளில் தண்ணீர் கிடைக்கும் அந்த நேரம் வரை, நான் வளிமண்டலத்தின் காற்றை சுவாசிக்கும் அந்த நேரம் வரை, என் சொந்த நிலத்திற்காக என் வாளை உயர்த்துவேன்".

இப்போது, நான் ஒருபோதும் அடிபணியவோ அல்லது சமரசம் செய்யவோ மாட்டேன், தமிழீழ விடுதலைக்காக என் வாளை உயர்த்துவேன்.

மீண்டும் ஒருமுறை, உங்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

இவ்வாறு ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ அவர்கள் உரையாற்றினார்.

---

### பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர்

# மருத்துவர் ராமதாஸ் பிறந்த நாள்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!



சென்னை, ஜூலை 26 -

பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் மருத்துவர் ராமதாஸ் அவர்களின் பிறந்த நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துச் செய்தி வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலை தளப்பதிவு வருமாறு:-

**பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் மருத்துவர் அய்யா ராமதாஸ் அவர்களுக்கு இனிய பிறந்தநாள் நல்வாழ்த்துகள்!**

**நீண்ட ஆயுளோடு, தங்களது பொதுவாழ்க்கைப் பயணம் தொடர வேண்டுமென விழைகிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---



நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினராக, கலைஞானி கமல்ஹாசன் நேற்று பதவியேற்றதறிவோம்! முன்னதாக, நேற்று முன்தினம் அவர், புதுடெல்லி – நாடாளுமன்ற வளாகத்தில் அமைந்துள்ள, அரசியல் மேதை முரசொலி மாறன் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து வணங்கினார். அப்போது மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா உடனிருந்தார்.

---

# நாடாளுமன்றம் 5வது நாளாக முடங்கியது!

### முக்கிய பிரச்சினைகள் குறித்து விவாதிக்க எதிர்க்கட்சிகள் வலியுறுத்தல்!

*புதுடெல்லி, ஜூலை 26-*

*பீகார் வாக்காளர் பட்டியல் திருத்தம் உள்பட முக்கிய பிரச்சினைகள் குறித்து விவாதிக்குமாறு எதிர்க்கட்சிகள் விடுக்கும் கோரிக்கையை ஏற்க ஒன்றிய அரசு மறுப்பதால் நாடாளுமன்றம் 5வது நாளாக முடங்கியது.*

*நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் கடந்த 21 ஆம் தேதி தொடங்கியது முதல், ஆபரேஷன் சிந்தூர், பீகார் வாக்காளர் பட்டியலில் சிறப்பு தீவிர திருத்தம் செய்வதை எதிர்த்து எதிர்க்கட்சிகள் முழக்கமிட்டு வருகின்றன. எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கோரிக்கையை ஏற்க ஒன்றிய அரசு மறுத்து வருகிறது. நேற்றும் மக்களவை கூடியவுடன் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப் பிரச்சினையை முன்வைத்து முழக்கங்களை எழுப்பினர். இதனால், பிற்பகல் 2 மணிவரை அவை ஒத்திவைக்கப்படுவதாக சபாநாயகர் ஓம் பிர்லா அறிவித்தார்.*

**மாநிலங்களவை**

*மாநிலங்களவையில் புதிய உறுப்பினர்கள் பதவியேற்ற பின்னர், பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பாக அவை நடவடிக்கையை ஒத்திவைத்து விவாதிக்க எதிர்க்கட்சி எம்.பி.க்கள் கோரிக்கை வைத்தனர். அவை துணைத்தலைவர் இதனை நிராகரித்ததால் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் முழக்கமிட்டனர். இதையடுத்து, மாநிலங்களவை நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டது.*

---

### பல லட்சம் பேருக்கு பார்வையளித்த மருத்துவர்

# நம்பெருமாள்சாமி மறைவு மருத்துவத் துறைக்கு பேரிழப்பு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, ஜூலை 26 -**

**பல லட்சம் பேருக்கு பார்வையளித்த மருத்துவர் நம்பெருமாள் சாமி மறைவு மருத்துவத் துறைக்கு மாபெரும் இழப்பு ஆகும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.**

மதுரை அரவிந்த் கண் மருத்துவமனை குழுமத்தின் மதிப்புறு தலைவர் நம்பெருமாள்சாமி மறைவையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

புகழ்பெற்ற மருத்துவரும் மதுரை அரவிந்த் கண் மருத்துவமனை குழுமத்தின் மதிப்புறு தலைவருமான 'பத்மஸ்ரீ' நம்பெருமாள்சாமி அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகவும் வேதனையுற்றேன்.

தென் தமிழ்நாட்டில் மிக எளிய வேளாண் குடும்பத்தில் பிறந்து, மதுரை மருத்துவக் கல்லூரியில் மருத்துவப் படிப்பையும், அமெரிக்காவில் மேல்படிப்பையும் முடித்து இந்தியாவின் முதல் விழித்திரை சிறப்பு மருத்துவர் என்ற பெயர் பெற்றவர் நம்பெருமாள்சாமி அவர்கள்.



ஏழை எளியோருக்கும் கண்மருத்துவம் கிடைக்க வேண்டும், கண்பார்வைக் குறைபாட்டை நீக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு தொடங்கப்பட்ட அரவிந்த் கண் மருத்துவமனையின் நிறுவனர்களில் ஒருவர் மருத்துவர் நம்பெருமாள்சாமி என்பது குறிப்பிடத்தக்கது.

இலட்சக்கணக்கான மக்களுக்குக் கண்பார்வை அளித்த நம்பெருமாள்சாமி அவர்களின் சேவைக்கு அங்கீகாரமாக உலகப் புகழ்பெற்ற டைம் இதழ், உலகின் செல்வாக்கு மிகுந்த 100 நபர்களில் ஒருவராகவும் இவரைத் தேர்வு செய்திருந்தது.

நம்பெருமாள்சாமி அவர்களிடம் பயின்ற நூற்றுக்கணக்கான மாணவர்களும் மருத்துவர்களாகி அவரது வழியில், ஏழை எளிய மக்களுக்குக் கண் சிகிச்சை அளித்து வருகின்றனர் என்ற வகையில் இத்துறையில் அவர் புரிந்துள்ள சாதனை காலத்தால் அழியாதது.

பல இலட்சம் பேருக்கு பார்வையளித்த மருத்துவர் நம்பெருமாள்சாமி அவர்களின் மறைவு மருத்துவத்துறைக்கும் மதுரை மக்களுக்கும் பேரிழப்பாகும்.

அன்னாரை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்தினர், மருத்துவத்துறை நண்பர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

# கீழடி அகழாய்வு அறிக்கை வெளியிடுவதில் தாமதம் ஏன்?

### திருச்சி சிவா கேள்விக்கு – ஒன்றிய அமைச்சர் விளக்கம்!

*புது தில்லி, ஜூலை 26-*

*கீழடி அகழாய்வின் துல்லியமான கண்டுபிடிப்புகளை வெளியிடுவதில் உலகளாவிய அறிவியல் நடைமுறைகளைப் பின்பற்ற இந்திய தொல்லியல் துறை உறுதி பூண்டுள்ளதாக ஒன்றிய கலாசாரம் மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் தெரிவித்துள்ளார்.*

*கீழடி யில் 2013-16 ஆண்டுகளில் நடத்தப்பட்ட இரு கட்ட ஆய்வறிக்கையை நிறுத்தி அறிக்கை வெளியிடுவதை தாமதப்படுத்தியது தொடர்பாக மாநிலங்களவையில் திருச்சி சிவா கேள்வி எழுப்பியிருந்தார்.*

*இதற்கு ஒன்றிய அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் வியாழக்கிழமை அளித்துள்ள எழுத்துப்பூர்வ பதிலில், 'வைகை நதிப் படுகையில் ஆய்வு நடத்திய பிறகு, கீழடியின் தொல் பொருள்*



*திறனை இந்திய தொல்பொருள் ஆய்வு மையம் அடையாளம் கண்டுள்ளது. 2014-15, 2015-16 மற்றும் 2016-17 ஆண்டுகளில் இந்த இடம் அகழாய்வுக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. முக்கியமான இடங்களில் அகழாய்வுகள் மாநில தொல் பொருள் துறைகள் மற்றும் கல்வி நிறுவனங்கள் உள்பட பல்வேறு நிறுவனங்களால் செய்யப்படுகின்றன. தற்போது, கீழடி அகழாய்வை தமிழ்நாடு தொல்பொருள் துறை நடத்தி வருகிறது' என்று கூறியுள்ளார்.*

*மதுரை கிளை உயர்நீதி மன்றத்தில் அளித்த உறுதி மொழிக்கு மாறாக ஒன்பது மாதங்களாகியும் கீழடி அறிக்கை இன்னும் வெளியிடப்படாதது குறித்த திருச்சி சிவாவின் மற்றொரு கேள்விக்கு. அப்படியொரு உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை என்றும், 2014-15, 2015-16 ஆண்டுகளில் நடத்தப்பட்ட ஆய்வறிக்கை ஏற்கெனவே நீதிமன்றத்தில் தாக்கல் செய் யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் பதிலளித்துள்ளார்.*

*இதைத் தொடர்ந்து கீழடி அகழாய்வு அறிக்கையை தயாரித்த மூல ஆய்வாளரிடம் மீண்டும் அறிக்கையை சமர்ப்பிக்க என்ன காரணம் என்ற திருச்சி சிவாவின் மூன்றாவது கேள்விக்கு, 'ஆய்வுக்குத் தலைமை தாங்கும் தொல்பொருள் ஆய்வாளர் சமர்ப்பிக்கும் அறிக்கையை நிபுணர்கள் குழு ஆய்வுக்கு உள்படுத்தி சரிபார்க்கும். பிறகு நிபுணர் குழு வின் முடிவுகள் அறிக்கையில் சேர்க்கப்பட்டு ஆய்வுக்குத் தலைமை தாங்கிய ஆய்வாளரின் ஒப்புதலுடன் அலுவல்பூர்வமாக அறிக்கையை தொல்லியல் துறை வெளியிடும்.*

*இந்த விஷயத்தில் தலைமை ஆய்வாளரின் அறிக்கை ஆய்வுக்கு உள்படுத்தப்பட்டு நிபுணர் குழுவின் முடிவுகள் அவரிடம் பகிரப்பட்டுள்ளன. கீழடி அகழாய்வின் துல்லியமான கண்டுபிடிப்புகளை வெளியிடுவதில் உலகளாவிய அறிவியல் நடைமுறைகளைப் பின்பற்ற இந்திய தொல்லியல் துறை உறுதிபூண்டுள்ளது' என்று அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.*